# அகநானூற்றில் வேளாண்மை செய்திகள்

*முனைவர் தா. லதா*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5772

### முன்னுரை

*மனிதன் ஐவகை நிலங்களைப் பிரித்து அந்தந்த நிலத்தின் தன்மைக்கேற்ப பயிர்செய்து தனது வாழ்வாதாரங்களை தேடிக் கொண்ட நிலையினை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.*

*“விவசாயம் தான் நரமாமிசத்திலிருந்து மனிதனை நாகரி கத்திற்கு அழைத்து வந்தது. உணவுப் பழக்கத்தில் விலங்குகளே ஆதிமனிதர் களின் ஆசான்கள். விலங்கு தின்ற எதையும் மனிதன் தின்றான். பழங்கள், கிழங்குகள், இலை தழைகள் விலங்கின் தசைகள் என்பன கிட்டாத போது பிணங்கள் மனிதர் களின் பெரு விருந்தாயின”*

**மூன்றாம் உலகப்போர் - வைரமுத்து**

ஆகவே, வேளாண்மையை மனிதன் என்று கண்டுபிடித்தானோ, அன்றே மனித சமூகத்தின் நாகரி க வளர் ச்சி தோன்றியிருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

### நிலத்தை பதப்படுத்துதல்

நிலத்தை பதப்படுத்தி அதை வேளாண்மை செய்வதற்கு ஏற்ற வகையில் தயார் செய்யும் பணியை விவசாயிகள் முதன்மை வேலையாகச் செய்தனர். நிலத்தின் தன்மையை விவசாயிகளால் உணர முடிந்தது. நிலத்தை ஏர் கொண்டு உழுவதின் வாயிலாக, மண்ணுக்கு காற்றோட்டம் கிடைத்து, பயிர் நன்கு விளையும் என்னும் அறிவை சங்க கால மக்கள் அறிந்திருந்தனர்.

வேளாண் செய்வதற்கு தேவையான விதைகளை பக்குவப்படுத்தியும், பாதுகாத்தும் வைத்திருந்தனர்.

**1. வாழை**

***“கோழிலை வாழைக்கோள்முதிர் பெருங்குலை***
***ஊழுறு தீங்கனி, உண்ணுதர்த் தடுத்த***
***சாரற் பலவின் களையோடு ஊழ்படு***
***பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்***
***அறியாது உண்ட கடுவின் அயலது***

***கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது***
***நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்***
***குறியா இன்பம், எய்தும் நாட"***

***பா.2***

வாழையும், பலாவும் பழுத்துக் கனிந்தன. அப்பழங்களிலிருந்து தேன்வழிந்தோடிப் பாறைச் சுனையில் நிறைந்தது. பாறைச் சுனையில் குளமாய் தேங்கியிருந்த தேனை நீர் எனக் குடித்த ஆண் குரங்கு மதுவைக் குடித்தது போல், மயக்கமுற்று மலையேற முடியாமல் மலர்ப்படுக்கயில் கண்ணுறங்குகிறது என்று நாட்டின் வளத்தினை தோழி தலைவனிடம் கூறி, இனிமேல் பகலில் தினைப்புனத்தில் தலைவியை சந்திக்க முடியாது ஏனென்றால், தினைக்கதிர் வளர் ந்து விட்டதால் தலைவி தினைப்புனம் காவலுக்கு வரமாட்டாள் நீ திருமணத்திற்கு ஏற்பாடு செய் எனக் கூறுவதாக அமைந்துள்ள இப்பாடலில் வாழை, பலா, தினை இவற்றினை சங்ககால மக்கள் பயிர் செய்ததை அறிய முடிகிறது.

### 2. பலா

***"விழுக்கோட் பலவின் பழுப்பயம் கொண்மார்***
***குறவ ரூன்றிய குரம்பை புதைய***
***வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்"***

***பா 12***

அணில் ஆடும் பெரியகிளைகளையுடைய சிறந்த குலைகளைக் கொண்ட பலாமரத்தின் பழங்கள் பழுத்தால் குரங்குகள் தின்று விடும். பழுத்து கீழே விழுந்து வீணாகி விடாமல் இருக்க, மரத்தின் கீழே சிறு குடிசையை அமைத்திருந்தார்கள் என்ற செய்தி சங்ககால மக்களின் வேளாண் அறிவு விளங்குகிறது.

### 3. நெல்

இனிதாக இல்லறம் நடத்திக் கொண்டிருந்த தலைவன், பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்ல நினைக்கிறான். பிரிய நினைக்கும் காலம் நடுக்கும் குளிர் கொண்ட கூதிர் காலம்.

***"மாசுஇல் தூமடி விரி ந்த சேக்கை***
***கவவுஇன் புறாமைக் கழிக - வளவயல்***
***அழல்நுதி அன்ன தோகை ஈன்ற***
***கழனி நெல்லின் கவை முதல் அலங்கல்***
***நிரம்பு அகன் செறுவில் வரம்பு***
***அணையாத் துயல்வரப்***
***புலம்பொடு வந்த பொழுது கொள்***
***வாடை***
***இலங்குபுங் கரும்பின் ஏர் கழை இருந்த"***

***பா 13***

வளமான வயலில் நெருப்புச் சுவாலை போன்ற நெல் இலைகள் ஈன்ற கழனி நெல்லின் கவைத்த அடியைக் கொண்டு ஆடுகின்ற நெற்கதிர் கள் நிரம்பிய அகன்ற வயலில் வரப்பை அணையாகக் கொண்டு அசைகிறது கதிர் கள் எனக் குறிப்பிடும் பொழுது வயல், கழனி, செறு என்ற மூன்று சொற்கள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது.

கழனி என்பது ஓர் அகன்ற நீர் நிலைக் கொண்ட விளைநிலம். இதில் நெல், கரும்பு இரண்டினையும் பயிரிடுவர். நூற்றாண்டு கணக்கான பெரிய வயல்வரப்பைக் கொண்ட வயல் கழனி ஆகும். "செறு" என்பது அந்த வயல்களில் ஒரு பகுதி. அது வரப்புடன் காணப்படும் ஆகிய செய்திகள் இதில் அடங்கியுள்ளன.

வளமான வயலில் வாடைக்காற்று வீசும் பொழுது, கரும்பின் மீது அமர் ந்திருக்கும் வெண்குருகு ஒலி எழுப்புவதைப் போல தலைவி துயரமடைவாள் என உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### உழவர்களின் செயல்கள்

***"கங்குல் ஓதைக் கலிமகிழ் உழவர்***
***பொங்கழி முகந்த தாஇல் நுண்துகள்***
***மங்குல் வானின், மாதிரம் மறைப்ப***
***வைகுபுலர் விடியல் வைபெயர்த்து ஆட்டி"***

***பா 37***

கங்குல் என்பது இருள். இங்கு அதிகாலை பின்னிருட்டு முதலில் துயில் எழுந்தவர்கள்

அடுத்தடுத்து மற்றவர்களையும் துயிலெழுப்புகிறார்கள். முதல் நாள் ஒரு பெரிய வயலில் கதிர் அறுப்பு முடிந்திருக்கிறது. வயலில் அறுத்த கதிருடன் சேர்த்த நெற்தாள்களை கட்டு கட்டாக கட்டி களத்து மேட்டுக்கு கொண்டு வருவார்கள். அங்கு அந்தக் கட்டை உயரத்தூக்கி தரையில் அடிப்பார்கள். உதிர்ந்து விட்ட நெல்மணி போக, நெற்தாளை ஓரமாக அடுக்கி வைப்பார்கள்.

வேலை செய்த களைப்பு நீங்க கள்ளினைக் குடிப்பார்கள். கொள்ளும், பயறும் பாலுடன் கலந்து ஆக்கிய வெண்மையான கஞ்சியைக் குடிப்பர்.

> ***“நெடுநெல் அடைச்சிய கழனிஏர் புகுந்து***
> ***குடுமிக் கட்டிய படைப்பையோடு மிளிர***
> ***அரி கால் போழ்ந்த தெரி பகட்டு உழவர்”***
> ***(பா 41)***

செந்நெல் தாளினை உழவர்கள் அரிந்துக் குவிப்பர். நெல்லறியும் உழவர் களின் களைப்புத் தீர அவர்களுக்கென கள்ளினை சுமந்து வரும் வண்டியானது சேற்றிலே பதிந்து விட்டால், சிறந்த கரும்புகளை வெட்டிச் சேற்றிலே அடுக்கி, சக்கரம் தடையின்றி வர வழிச் செய்வர் எனும் செய்தியானது நெல், கரும்பு இரண்டினையும் அவர் கள் பயிர் செய்த பொழுதும் நெல்லுக்கே அதிக கவனம் செலுத்தியதையும் சேற்றில் மாட்டிக் கொண்ட சக்கரத்தை மீட்க, கரும்பை வெட்டி முட்டுக் கொடுத்த செய்தி, கரும்பின் அதிக விளைச்சலே இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்பதை அறிய முடிகிறது.

## தினை

> ***“முதைச்சுவற் கலித்த மூரி ச் செந்திணை***
> ***ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்***
> ***பகுவாய்ப் பல்லி பாடுஓர்த்துக் குறுகும்***
> ***புருவை பன்றி வருதிறம் நோக்கி***
> ***கடுங்கை கானவன் கழுதுமிசைக் கொள்ளும்”***
> ***(பா 88)***

மேட்டு நிலத்தில் முளைத்து விளைந்திருந்த நல்ல திணைக் கதிர்களை உண்ணுவதற்காகப் புருவைப் பன்றி (முள்ளம் பன்றி) வரும். அதனை அறிவிப்பதற்காக பெரிய வாயையுடைய பல்லி ஒலி எழுப்பும். ஒலி எழுப்பாத தருணம் பார்த்து முள்ளம் பன்றி விளைச்சலுக்குள் புகுந்து திணைக் கதிர்களை உண்ணும். அதை தடுப்பதற்காக கானவன் கழுதின் மேல் ஏறி காவல் புரி வான் என்ற செய்தி இங்கு சுட்டப்பட்டுள்ளது. மேலும்,

> ***“செழுஞ்செய் நெல்லின் சேயரி ப்***
> ***புனிற்யுறுக்கதிர்***
> ***மூதா தின்றல் அஞ்......................................***
> ***..............சிக் காவலர்***
> ***பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பா°இக்***
> ***காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தி யாக்கும்”***
> ***பா 156***

காவிரி நீரின் வளத்தினால் நன்கு வளர்ந்துள்ள நெற்கதிர்களை, கன்றை ஈன்றுள்ள பசுக்கள் தின்று விடாமல் தடுக்க உழவர் கள் அவற்றிற்கு கரும்பினை வெட்டி உண்பிப்பார் கள் என்னும் செய்தியின் மூலம் சங்ககால மக்கள் நெல், கரும்பு இவற்றையே அதிகம் பயிரிட்டுள்ளமையை உணர முடிகிறது.

## உழுகின்ற முறையை அறிந்திருத்தல்

> ***“பேர் உறை தயை பெரும்புலர் வைகறை***
> ***ஏர் இடம் படுத்த இருமறுப் புழிப்***
> ***புறமாறு பெற்ற புவல் ஈரத்து***
> ***ஊன்கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்***
> ***வித்திய மருங்கின் விதை பல நாறி***
> ***--- ---- --- ---- ----***
> ***கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த***
> ***வல்லிலைக் குருந்தின் வாங்குசினை***
> ***இருந்து”***
> ***(பா 194)***

பெருமழை பெய்த பேரிருள் புலர்கின்ற காலைப் பொழுதிலே ஏர் களால் உழுத இடம் இரு மருங்கிலும் புழுதி கீழ்மேலாகப்

புரண்டிருக்கும். செம்மண் நிலத்தின் ஈரத்திலே ஊனைக் கிழித்த நெடிய உழவு சாலிடத்து விதைத்த இடங்களிலே விதைகள் பலவும் முளைத்து வளர் ந்திருந்தன. ஒலிக்கும் பறையின் ஒலியைக் கேட்டுக் கொண்டே உழவர் கள் வயலில் விளைந்துள்ள களைகளை அகற்றினர். சில இடங்களில் வரகுகளும் பயிரிட்டு விளைந்தன. நன்கு விளைந்த வரகுக்கதிர் களை, பெரிய தோகையினையுடைய மயில்கள் உண்ணும் எனும் செய்திகள் வாயிலாக வரகு பயிர் செய்துள்ளமையை அறிய முடிகிறது.

## தொகுப்புரை

சங்க இலக்கியங்கள் தமிழன் வாழ்ந்து சென்ற வாழ்வியலை எடுத்தியம்புகின்றன. அகநானூறு பாடல்களில் சங்ககால மனிதர் கள் பயிர் செய்த நெல், வாழை, கரும்பு, பலா, திணை, வரகு போன்றவற்றை பயிரி ட்டு வாழ்ந்த செய்தியினை அறிய முடிகிறது.

வேளாண்மையே சங்க காலத் தமிழனுக்கு முதனிலைத் தொழிலாக இருந்தது. இயற்கையோடு ஒன்றிணைந்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து வளமான வாழ்வை வாழ்ந்திருந்தனர் நம் முன்னோர் கள் என்பது புலனாகிறது.

## துணை நூற்பட்டியல்

1. அகநானூறு- நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
2. மூன்றாம் உலகப்போர் - வைரமுத்து கிழக்குப் பதிப்பகம், 177/103, அம்பாள் கட்டிடம், இராயப்பேட்டை, சென்னை - 14.